## அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் - 2014

அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1995 இன் 35 ஆம் இலக்க அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 35(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) புதிய ஆய்வுகூடக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக மதியுரைக் கட்டணமாக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,143,177 ஆன கட்டிட முடிவுறா வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ஏனைய செலவினம் மற்றும் வெளிநாட்டு பிரயாணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்குரிய எனினும் நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த ஆசிய நாட்டு அளவீட்டு நிறுவகத்தின் அங்கத்துவக் கட்டணமான ரூபா 84,892 தொகையும் ரூபா 273,431 தொகையான கட்டிட முடிவுறாத வேலைகள் மதியுரைக் கட்டணங்கள் என்பன மீளாய்வாண்டின் நிதிஏற்பாடுகளிலிருந்து செலுத்தப்பட்டிருந்தன.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

2008 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 66,531 தொகையான பெற வேண்டிய முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கடன்கொடுத்தோரின் கூட்டுத்தொகை ரூபா 320,103 தொகைக்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் விரிவான பட்டோலைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டம் | |
| (i) VII ஆம் அத்தியாயத்தின் 35(2) பிரிவு | மீளாய்வாண்டின் நிதியத்தின் வருமானத்தில் 1/3 ஆன ரூபா 54,282,268 தொகை மற்றும் |

| | | |
|---|---|---|
| | | 2013 ஆம் ஆண்டிற்குரிய செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 8,830,977 தொகை உட்பட ரூபா 63,113,245 தொகையினை அரச வருமானத்திற்கு செலவு வைக்காமல் உரிய அங்கீகாரமின்றி கட்டிட நிர்மாணத்திற்காக பயன்படுத்தப் பட்டிருந்தது. |
| | (ii) IV ஆம் அத்தியாயத்தின் 20(1)(அ) மற்றும் VIII ஆம் அத்தியாயத்தின் 37 ஆம் பிரிவு | ஏற்பாடுகளின் பிரகாரம் வியாபாரத்தில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து அளவை உபகரணங்களையும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு அனைத்து உபகரணங்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய நடைமுறையொன்று நிதியத்தினுள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | ஏற்பாடுகளின் பிரகாரம் பதில் கடமையாற்றும் காலம் 3 மாதங்கள் கூடிய அளவிற்கு உட்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2009 மே 05 ஆந் திகதி முன்னாள் பணிப்பாளர் இளைப்பாறியதன் பின்னர் கணக்காய்வு திகதி வரையிலும் அவ் வெற்றிடம் நிரப்பப்படாது பதில் கடமை அடிப்படையில் ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு உத்தியோகபூர்வ கடமை மேவுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) | 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய பீ/எவ்/437 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிதியத்திற்கு உரித்தான வகையில் குறித்துரைக்கப்பட்ட காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.1 (அ) | நிதியத்தின் வருடாந்த பாதீடு 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 645,622,066 பெறுமதியான சொத்துக்களுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 93,149,853 தொகையான செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா

103,299,406 ஆக இருந்தது. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 10,149,552 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது. திறைசேரி உண்டியல் மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் என்பன முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது குறைவடைந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மாவட்ட உத்தியோகத்தர்களால் மெய்மையாய்வு செய்யப்பட்ட அளவை அலகுகள் மற்றும் அது தொடர்பாக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் அந்த உத்தியோகத்தர்களால் நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவது தொடர்பில் முறையான நடைமுறையொன்று நிதியத்திடம் காணப்படவில்லை. ஆகையால் அதன் அளவீட்டு அலகு முத்திரையிடப்பட்டதன் மூலம் பெறப்பட்ட வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்திகொள்ள முடியாதிருந்தது.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மெய்மையாய்வு நிலையங்கள் மற்றும் திகதிகள் தொடர்பாக வியாபாரிகளை அறிவூட்டுவதற்காக பத்திரிகை அறிவித்தல்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,960,757 தொகை செலவிடப்பட்டிருந்தது. இச்செயற்பாட்டை மேற்கொள்வதற்கு சிக்கனமான தொடர்பாடல் முறைகள் காணப்படுகையில் அவற்றைப் பின்பற்றாமல் ஆண்டில் மெய்மையாய்வு நிலையங்கள் மற்றும் திகதிகள் முன்னர் தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்படாமையும் இந்நிலையங்களில் வியாபாரிகள் பயன்படுத்துகின்ற கொண்டு செல்லக்கூடிய அளவீட்டு உபகரணங்கள் மாத்திரம் மெய்மையாய்வு செய்யப்படுவதும் அறிவித்தல்களை இலக்காக வைக்கப்படும் வியாபாரிகளுக்கு அறிவித்தலால் தேவையான செய்தி கிடைக்கும் குணாதிசயம் நிறைவேற்றப்படாமையால் செலவினம் முறையான ஆக்கபூர்வமான செலவினமொன்றாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தில் அந்நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகளுக்காக ரூபா 226,800 செலவிடப்பட்டிருந்தது.

### 4.3 பதவியணியினர்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்தில் 04 வெற்றிடங்களும் மூன்றாம் மட்டத்தில் 30 வெற்றிடங்களும் உட்பட மொத்தமாக 148 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 மே 05 ஆந் திகதி முன்னாள் பணிப்பாளர் இளைப்பாறியதன் பின்னர் கணக்காய்வு திகதி வரையிலும் 5 வருடங்கள் மற்றும் 11 மாதங்களாக அப்பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் அப்பதவிக்காக பதில் கடமை அடிப்படையில் சேவை புரிந்த பணிப்பாளருக்கு 2014 ஆம் ஆண்டிற்குரிய அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய PZD/12 ஆம் இலக்க 22 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது திணைக்களத்தின் பதில் கடமை புரியும் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானச் செலவினக் கட்டுப்பாடு
(ஆ) சொத்துக்களின் நிர்வாகம்
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) பதவியணியினர் நிர்வாகம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு